**<u>செய்தி வெளியீடு எண் 279</u>** **<u>நாள்–27.3.2010</u>**

## <u>தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் மகாவீரர் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி</u>

**வர்த்தமான மகாவீரர் பிறந்த திருநாள் இந்த ஆண்டில் மார்ச் 28ஆம் நாளன்று நாடு முழுதும் ஜைன சமய மக்களால் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.**

**இன்றைய பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவுக்கு அருகில், ஓர் அரச குடும்பத்தில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பிறந்தவர் வர்த்தமானர். இவர் அரச வாழ்வையும், பிற செல்வங்களையும் இளமையிலேயே துறந்ததுடன், விருப்பு, வெறுப்புகளையும் வென்றவர் என்பதால், வரலாற்றில் "மகாவீரர்" என அழைக்கப்படுகிறார்.**

**ஜைன சமயக் கோட்பாடுகளில் சீர்திருத்தங்கள் செய்த மகாவீரர், "நல்ல நம்பிக்கை", "நல்ல அறிவாற்றல்", "நல்ல பண்புகள்", ஒவ்வொருவருக்கும் தேவை எனப் போதித்தார். "எந்த உயிரினத்திற்கும் தீங்கு செய்தலாகாது; உண்மைகளை மட்டுமே பேச வேண்டும்; முறையற்ற வழியில் எந்தப் பொருளையும் ஏற்கலாகாது; அறநெறி நீங்கி இன்பம் நுகர்தல் ஆகாது; பொருளாசையை முற்றிலும் நீக்குதல் வேண்டும்" என்று அறிவுறுத்தினார்.**

**அரசபோகத்தையும், செல்வத்தையும் துறந்து, தாம் போதித்த கொள்கைகளுக்குச் சான்றாக வாழ்ந்து காட்டிய மகாவீரர் பிறந்த திருநாளுக்கு "அரசு விடுமுறை" வழங்கி, தமிழகத்தில் வாழும் ஜைன சமய மக்கள் தங்கள் குடும்பத்தார், குழந்தைகள், நண்பர்களுடன் கொண்டாடி மகிழ்ந்திட உதவியது தி.மு.க அரசு.**

**முந்தைய அ.தி.மு.க. அரசு காலத்தில் மறுக்கப்பட்ட அந்த விடுமுறையை 2006–க்குப்பின் மீண்டும் நடைமுறைப்படுத்தி, தமிழகத்தில் வாழும் ஜைன சமய மக்களிடம் கொண்டுள்ள அன்பினைப் புலப்படுத்திய இந்த அரசின் சார்பில் அவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த மகாவீரர் பிறந்த தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

**பிற உயிர்களுக்கு எந்த வகையிலும் தீங்கிழைத்தல் கூடாது என எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டிய அறவாணர் மகாவீரர் பிறந்த இந்நன்னாளில் எல்லா மனிதரிடத்தும் அன்பு செலுத்தி, மனித நேயம் தழைக்கப் பாடுபடுவோம் என உறுதியேற்போமாக!**

வெளியீடு: **இயக்குநர்,**

**செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.**

******